**உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்**

# அடைக்கலம் 1



Compiled by
**P. Isaac Chandran**

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
சங்கீதம் 46:1

சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர், நெருக்கப்படுகிறகாலங்களில் அவரே தஞ்சமானவர்.
சங்கீதம் 9:9

கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.
சங்கீதம் 18:2

ஆபத்துநாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக, யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.
சங்கீதம் 20:1

கர்த்தர் அவர்களுடைய பெலன், அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்.
சங்கீதம் 28:8

உமது செவியை எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய் என்னைத் தப்புவியும், நீர் எனக்குப் பலத்த துருகமும், எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும்.
சங்கீதம் 31:2

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும், இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.
சங்கீதம் 37:39

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா.)
சங்கீதம் 46:7

அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்.
சங்கீதம் 48:3

என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும், என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.
சங்கீதம் 59:1

அவன் வல்லமையை நான் கண்டு உமக்குக் காத்திருப்பேன், தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம்.
சங்கீதம் 59:9

நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன், எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்.
சங்கீதம் 59:16

என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன், தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்.
சங்கீதம் 59:17

நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.
சங்கீதம் 61:3

அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர், நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.
சங்கீதம் 62:2

என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது, பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள், அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள், தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சேலா.)
சங்கீதம் 62:7,8

அநேகருக்கு நான் ஒரு புதுமைபோலானேன், நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.
சங்கீதம் 71:7

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.
சங்கீதம் 90:1

கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார்.
சங்கீதம் 94:22

ஆம்! தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமாயிருக்கிறார் அவரே நம் சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருக்கிறார்

எக்காலத்திலும் அவரையே நம்புவோம். அவர் சமுகத்தில் நம் இருதயத்தை ஊற்றிவிடுவோம். சிறுமைப்பட்டவனுக்குக் அவர் அடைக்கலமாயிருந்து நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமாயிருக்கிறார்

*******************